**FIRST INFORMATION REPORT** TAMIL NADU POLICE

முதல் தகவல் அறிக்கை INTEGRATED INVESTIGATION FORM-I

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்) C 8066999

1. District : Coimbatore PS: V & AC Year: 2020 FIR No.: 01/2020/AC/CB Date: 29.01.2020 1900 hrs
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7 (a)
(ii) Act சட்டம்: Act 1988 as amended by the Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 14.12.2019 Date to : 29.01.2020
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 1100 hrs Time to : 1115 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 29.01.2020 Time : 1800 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 29.01.2020 Time : 1800 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : Tamil Computer Typed
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: about 20 km South East
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : O/o Assistant Engineer Nadupalayam EB Office Sulur taluk, Coimbatore District
முறைக் காவல் எண் முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : P. Baladhandapani (b) Father's/ Husband's Name : Palanisamy
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 64/2020 (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Travels (g) Address : DOOR No. 11/1, Balasundaram Street Kamadhenu Nagar (West) K.R. Puram, Coimbatore
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Vasu, Assistant Engineer, Nadupalayam EB office Sulur taluk, Coimbatore District

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

(2)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed …………………. Rank …………………. to take up the Investigation / Refused Investigation / transferred to PS………………………………………….on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 29/1/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 29/01/2020
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
29. 01. 2020. 2000 hrs

Name: பெயர் G. Arumugam Inspector of police
Rank: நிலை V.S.P.C. No. எண் ………
Coimbatore.

சமர்ப்பிக்கப்படுகிறது:

கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.01/2020/AC/CB u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as Amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி-

கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் G.ஆறுமுகம் ஆகிய நான் 29.01.2020-ம் தேதி மாலை 18.00 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்த போது கோவை மாவட்டம் கே.ஆர்.புரம், காமதேனு நகர் (மேற்கு), பாலசுந்தரம் வீதி, கதவு எண்.11/1-ல் வசிக்கும் திரு.பழனிச்சாமி மகன் திரு.P.பாலதண்டபாணி, வயது-64, என்பவர் என் முன்பு ஆஜராகி வாதியின் பெட்ரோல் பங்க் அமைக்கும் இடத்தில் உள்ள மின் கம்பத்தை மாற்றியமைக்க ரூ.10,000/- லஞ்சம் கேட்ட திரு.வாசு, உதவி மின் பொறியாளர், நடுப்பாளையம் மின் அலுவலகம், கோவை என்பவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி கணினியில் தட்டச்சு செய்த புகார் கொடுத்தார். நான் அந்த புகாரினை படித்து பார்த்தேன். அந்த புகாரில் திரு.வாசு, உதவி மின் பொறியாளர் நடுப்பாளையம் மின் அலுவலகம், கோவை என்பவர் வாதியின் மகன் திரு.கௌசிக் என்பவரது பெயரில் ஆரம்பிக்கப்படும் Petrol Bunk வளாகத்தில் அமைந்துள்ள மின் கம்பத்தை மாற்றி அமைக்க லஞ்சமாக ரூ.25,000/- கேட்டு வாதியின் வேண்டுகோளுக்கேற்ப லஞ்ச பணம் ரூ.20,000/- ஆக குறைத்தும் தற்போது ரூ.10,000/- கொடுக்க சொல்லி வலியுறுத்தியதாகவும், ஆனால் அவருக்கு லஞ்சமாக பணம் கொடுக்க விருப்பம் இல்லை என்றும் அதனால் திரு.வாசு, உதவி மின் பொறியாளர் நடுப்பாளையம் கோவை என்பவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியிருந்தது தெரியவந்தது. பின்னர் நான் புகார் வாதியின் முன்னடத்தை மற்றும் எதிரியின் முன்னடத்தை பற்றியும் புகார் வாதி மற்றும் எதிரிக்கு இடையே முன் விரோதம் ஏதேனும் உள்ளதா என தகவளாலியின் மூலம் தகவல் சேகரித்தேன். எதிரிக்கும் புகார்வாதிக்கும் எந்த முன் விரோதமும் இல்லை என்றும், எதிரியின் நடத்தை சர்ச்சைக்குறியது என்றும் என் ரகசிய விசாரணையில் தெரியவந்தது. மேலும் புகார் வாதி ஆஜர் செய்த DVD-ல் உள்ள ஆடியோவுடன் கூடிய வீடியோ பதிவு கவனமாக கேட்கப்பட்டது. அதிலிருந்து வாதியின் புகார் உண்மையானது என தெரியவந்தது.

எனவே நான் வாதியின் புகார் குறித்து சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்திற்கு தகவல் கொடுத்து இயக்குநரகத்தில் இருந்து வாய்மொழி உத்தரவு பெற்று இன்று 29.01.2020 -ம் தேதி இரவு 19.00 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.01/2020/AC/CB u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as Amended by the Prevention of Corruption (Amendment) Act 2018- ன் படி மேற்படி எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விபரம் பின் வருமாறு: அனுப்புனர் P.பாலதண்டபாணி, வயது 64, த/பெ பழனிசாமி, கதவு எண்.11/1, பாலசுந்தரம் வீதி, காமதேனு நகர் (மேற்கு), கே.ஆர்.புரம், கோயம்புத்தூர். பெறுநர், ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு பிரிவு, கோயம்புத்தூர். அய்யா, நான் கோயம்புத்தூர் கே.ஆர்.புரம், காமதேனு நகர் (மேற்கு), பாலசுந்தரம் வீதி, கதவு எண்.11/1-ல் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் கோவை ஆர்.எஸ்.புரத்தில் கடந்த 35 வருடமாக சொந்தமாக டிராவல்ஸ் வைத்து நடத்தி வருகிறேன். எனக்கு சூலூர் கண்ணம்பாளையம் கிராமத்தில் சர்வே எண்.329/4ல் 25 சென்ட் கொண்ட இடம் எனது பெயரிலும் எனது மனைவி திருமதி.வேலுமணி பெயரிலும் கூட்டாக உள்ளது. மேற்படி இடத்தில் Hindustan Petroleum Corporation Limited மூலமாக எனது இளைய மகன் கௌசிக் பெயரில் பெட்ரோல் பங்க் ஆரம்பிக்க உள்ளேன். மேற்படி பெட்ரோல் பங்க் அமையகூடிய இடத்திற்கு முன்புறம் மின் கம்பம் உள்ளது. HPCL கம்பெனியினர் பெட்ரோல் பங்க் அமையவிருக்கும் இடத்தை பார்வையிட்டபோது அங்கு வந்து போகும் வாகனங்கள் மேற்படி மின்கம்பத்தில் உரச வாய்ப்புள்ளதாகவும் அதனால் அந்த மின் கம்பத்தை சற்று தள்ளி வைக்குமாறு அறிவுறுத்தி சென்றார்கள். அதன்படி நான் 13.12.2019 ம் தேதி நடுப்பாளையம் மின் அலுவலகத்திற்கு சென்று அங்கிருந்த உதவி மின் பொறியாளர் திரு.வாசு அவர்களை சந்தித்து மின்கம்பத்தை மாற்றி அமைக்க கேட்டு நேரில் விண்ணப்பம் கொடுத்தபோது அதில் என்னுடைய மனைவி வேலுமணியின் கையெழுத்தையும் வாங்கிவரச்சொல்லி விண்ணப்பத்தை என்னிடமே திருப்பிகொடுத்துவிட்டார். நான் அவரிடம் அடுத்த நாள் எத்தனை மணிக்கு வரவேண்டும் என்று கேட்டபோது அவர் என்னிடம் அவருக்கு போன் செய்துவிட்டு பாப்பம்பட்டி பிரிவுக்கு வரசொன்னார். அப்போது நான் அவருடைய செல்போன் நம்பர் 9445442437 ஐ பெற்றுக்கொண்டு என்னுடைய செல்போன் எண் 9363112222-ஐ அவருக்கு கொடுத்தேன். அதன்படி அந்த விண்ணப்பத்தில் எனது மனைவியிடம்

கையொப்பம் பெற்று நான் மறுநாள் 14.12.2019-ம் தேதி காலை சுமார் 11 மணிக்கு திரு.வாசு, உதவி மின் பொறியாளர், நடுப்பாளையம், சூலூர் வட்டம், கோயம்புத்தூர் அவர்களை அவரது அலுவலகத்தில் நேரில் சந்தித்து HD மின்கம்பம் இடமாற்றம் செய்ய கோரி விண்ணப்பம் கொடுத்தேன். அப்போது அவர் மாற்றி அமைக்க வேண்டிய மின் கம்பம் உள்ள இடத்தை பார்வையிட வருகிறேன் என்று சொல்லி என்னை முன்னே போக சொல்லி அவர் என்னை பின் தொடர்ந்து அவருடைய மோட்டார் சைக்கிளில் வந்தார். என்னுடைய பெட்ரோல் அமையும் இடத்தை பார்வையிட்ட பின்பு அவர் எனது இடத்தில் உள்ள மின் கம்பத்தை மாற்றி அமைக்க அவருக்கு தனியாக ரூ.25,000/- தரவேண்டும் என்று சொன்னார். பின்னர் வேறு வழியில்லாததனால் நானும் சரி என்று சொன்னேன். பின்னர் நான் அவரிடம் எஸ்டிமேட் எப்போது ரெடியாகும் என்று கேட்டேன். அதற்கு அவர் எனக்கு முன்னால் ஒரு எஸ்டிமேட் போடாமல் இருக்கு அதை போட்டுவிட்டு என்னுடையதையும் போட்டு சேங்சன் வாங்கி தருவதாக சொன்னார். நான் பலமுறை அவரை சந்தித்து மின் கம்பம் மாற்றிமைப்பது சம்மந்தமாக கேட்க எனது விண்ணப்பத்திற்கு முன்பாக கொடுக்கப்பட்ட விண்ணப்பத்திற்கு எஸ்டிமேட் தயாரிப்பு பணி நிலுவையில் இருந்து வருவதால் அதை முடித்துவிட்டுதான் எனது எஸ்டிமேட்டை தயார்செய்து பின்பு மின் கம்பத்தை இட மாற்றம் செய்ய முடியும் என்று கூறி வந்தார். இதற்கிடையே நான் பெட்ரோல் பங்க் அமைய இருக்கும் எனது இடத்திற்கு தற்காலிக மின் இணைப்பை மேற்படி அலுவலகத்தில் இருந்தே பெற்றேன். பின்னர் நான் கடந்த 14.01.2020 ம் தேதி மீண்டும் மேற்படி அலுவலகம் சென்ற போது அங்கு திரு.வாசு, உதவி மின் பொறியாளர் அலுவலகத்தில் இல்லை எனவே நான் அவரை போனில் தொடர்பு கொண்ட போது அவர் வீடு உள்ள பாப்பம்பட்டி பிரிவுக்கு வர சொன்னார். நான் அங்கு சென்று அவரிடம் எஸ்டிமேட் ரெடி ஆகி விட்டதா என்று கேட்டேன். அதற்கு அவர் AD-க்கு அனுப்பியுள்ளதாக சொன்னார். அப்போது நான் அவரிடம் உங்களுக்கு ரூ.25,000/- கேட்டிருந்தீர்கள் நிறைய செலவு ஆகிவிட்டது அதனால் கொஞ்சம் தொகையை குறைத்து கொள்ளுங்கள் என்று கேட்டேன். அப்போது மீண்டும் ரூ.5,000/- குறைத்து ரூ.20,000/- கொடுங்கள் என்று கண்டிப்பாக சொன்னார். நானும் பொங்கல் கழித்து வந்து பார்க்கிறேன் என்று சொல்லி விட்டு வந்து விட்டேன். பின்னர் 22.01.2020 ம் தேதி காலை சுமார் 09.15 மணிக்கு நடுப்பாளையம் மின் அலுவலகத்திலிருந்து கமர்சியல் இன்ஸ்பெக்டர் திரு.நாகராஜன் என்பவர் எனது செல்

போனுக்கு தொடர்பு கொண்டு எஸ்டிமேட் சேங்சன் ஆகி வந்து விட்டது என்றும் அதன் தொகை ரூ.13290/-க்கு டிமான்ட் டிராப்ட்டாக கொண்டு வர வேண்டும் என்றும் மதியம் 2.30 மணிக்குள் கொண்டு வந்தால் கட்டி விட்டு ரசீது பெற்று கொள்ளலாம் என்று சொன்னார். அதன் பேரில் மேற்படி தொகைக்கான டிமான்ட் டிராப்ட் வங்கியில் பெற்று அதனை எடுத்து கொண்டு மதியம் சுமார் 2 மணிக்கு நடுப்பாளையம் மின் அலுவலகத்திற்கு சென்றேன். அப்போது அந்த அலுவலகத்தில் உதவி மின் பொறியாளர் திரு.வாசுவும் கமர்சியல் இன்ஸ்பெக்டர் திரு.நாகராஜனும் அவர்களும் இருந்தார்கள். நான் ரூ.13290/-க்கான டிமான்ட டிராப்ட்டை கமர்சியல் இன்ஸ்பெக்டரிடம் கொடுத்து மின் கட்டண இரசீது பெற்று கொண்டேன் அந்த இரசீது எண்.9759137 தேதி 22.01.2020. பின்பு என்னை உதவி மின் பொறியாளர் என்னை அந்த அலுவலகத்திற்கு வெளியே அழைத்து வந்து என்னிடம் சேங்சன் வாங்கி கொடுத்துட்டேன். பொங்கல் முன்னாடியே பாக்குறேனு சொன்னீங்க அப்பவே பணம் எவ்வளவு என்று சொல்லிட்டேன் அப்புறம் மறந்திட்டீங்க என்று சொன்னார். தற்போது என்னிடம் பணம் இல்லை என்று சொன்னேன். அப்போது அவர் நாளை வந்து ரூ.10,000/-ஐ கொடுங்கள் என்று வலியுறுத்தினார். நானும் வேறு வழியில்லாததால் சரி என்று சொல்லி வந்து விட்டேன். அதற்குபின் நான் அவரை தொடர்பு கொள்ளவில்லை. இன்று 29.01.2020 ம் தேதி காலை சுமார் 11.15 மணிக்கு நான் கண்ணம்பாளையத்தில் உள்ள எனது பெட்ரோல் பங்க் அமைய இருக்கும் இடத்தில் வேலையாட்களை கொண்டு வேலை செய்து கொண்டிருந்தேன். அப்போது மோட்டார் சைக்கிளில் வந்த நடுப்பாளையம் உதவி மின் பொறியாளர் திரு.வாசு அவர்கள் மேற்படி இடத்திற்கு எதிரில் வாகனத்தில் இருந்து கொண்டு என்னை அவரிடம் வரும்படி கூப்பிட்டார். நானும் அவரிடம் சென்றவுடன் அவர் என்னிடம் என்ன சார் கண்டுக்கவே மாட்டிங்கிறீங்க சாயந்திரம் பார்த்திடலாமா என்று கேட்டார். நான் மறந்து விட்டேன் சார் என்று சொல்லி எவ்வளவு என்று கேட்க அதற்கு அவர் அன்னைக்கே சொல்லிவிட்டேன் இல்லையா என்று சொன்னார். மீண்டும் எவ்வளவு என்று கேட்டபோது ரூ.10,000/- கொடுங்க நாளை காலைல பேலன்சை கொடுத்துடுங்க என்று சொன்னார். அதற்கு நான் முடிந்தால் சாயந்திரம் போன் பண்ணிட்டு வரேன் இல்லையென்றால் நாளைக்கு போன் பண்ணிட்டு வரேன் என்று கூறியவுடன் சரியென்று அவர் வந்த மோட்டார் சைக்கிளில் சென்று விட்டார். ஆனால் எனக்கு மின் கம்பத்தை மாற்றி அமைப்பது தொடர்பாக திரு.வாசு, உதவி மின்

பொறியாளர் அவர்களுக்கு லஞ்சமாக பணம் ரூ.10,000/- கொடுக்க விருப்பம் இல்லை. எனவே மின் கம்பத்தை மாற்றி அமைக்க ஏற்பாடு செய்ய லஞ்சமாக பணம் ரூ.10,000/- கேட்கும் திரு.வாசு, உதவி மின் பொறியாளார், நடுப்பாளையம் அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் உதவி மின் பொறியாளர் திரு.வாசுவும் நானும் இன்று 29.01.2020 ம் தேதி எனது பெட்ரோல் பங்க் அமையவிருக்கும் இடத்திற்கு முன்புறமாக வைத்து பேசியது எனது செல்போனில் பதிவு செய்து வைத்திருந்ததை DVD க்கு மாற்றி தங்களிடம் ஒப்படைக்கிறேன். இடம்- கோவை நாள்- 29.01.2020 இப்படிக்கு Sd/- (xxxxx) 29/01/2020 (P.பாலதண்டபாணி). Respected Madam, Received the complaint on 29.01.2020 at 18.00 hrs Sd/- (x/x/x) 29.01.2020 Inspector of Police, V&AC Coimbatore. Respected Madam, After conducting discreet enquiry, a case in Coimbatore V&AC, Cr.No.01/2020/AC/CB u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 was registered by me on 29.01.2020 at 19.00 hrs. Sd/- (x/x/x) 29.01.2020 Inspector of Police,V&AC Coimbatore. முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் புகார் மனு, வாதி ஆஜர் படுத்திய Novaplus என்று பெயர் பொறிக்கப்பட்ட DVD மற்றும் 65(B)(4)(C) of IEA 1872 certificate ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்டங்களுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்கள் நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பப்படுகிறது.

29/01/2020

G.ஆறுமுகம்,
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
கோயம்புத்தூர்